உயர்த்தவும், நடைமுறைகளைச் செம்மைப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளோம். இதற்கென 33-வது மானியத்தின்கீழ் நிதி வகை செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியின் ஆளுகையிலும் ஏனைய நகராட்சிகளின் ஆளுகையிலும் இயங்கிவருகிற உயர்நிலைப் பள்ளிகள் மீதான செலவினம் குறித்து அவைகட்கு வழங்கப்பட்டுவரும் உதவித் தொகைகளைத் தாராளமாக வழங்குவதற்கிணங்க, உரிய விதிமுறைகளைத் திருத்தியிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்பார்களென உறுதியாக நம்புகின்றேன். இதுவரை அவற்றிற்கு ஏற்பட்ட நிகர பற்றுக்குறைத் தொகையில் 50 சத வீதம் மட்டுமே ஈடு செய்து வந்ததற்கு மாருக, மாநில அரசு இப்போது அத் தொகையில் 66-2/3 சத வீதத்தை ஈடு செய்யக் கருதுகிறது. இதற்கென 13-வது மானியத்தின்கீழ் நிதி ஒதுக்கம் வேண்டப்பட்டுள்ளது. மற்றும், தனியார் பொறியியற் கல்லூரிகளிலும் பல்தொழிற் பள்ளிகளிலும் துண்டுவிழும் நிகர தொகைகளை அரசு பெருமளவில் ஈடு செய்ய வேண்டியிருப்பதால், அதற்கான நிதி ஒதுக்கமும் இதே மானியத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. 1967-68 முதல் இது குறித்த மாநில அரசின் பங்கு 66-2/3 சத விதத்திலிருந்து 75 சத வீதத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

உயரிய கலைத் திறனும், தொழில் நுட்பத் தரமும் வாய்ந்த தமிழ்ப் படங்களைத் தயாரிப்பதற்கு ஊக்கமளிக்கும் வகையில், முழு நீளத் தமிழ்த் திரைப்படங்களுக்கு ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கும் திட்டமொன்றைச் செயல்படுத்த அரசு கருதுகிறது என்பதை அறிய இம் மன்றத்தினர் களிப்படைவார்களென நம்புகின்றேன். 1967-ம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட திரைப் படங்களுக்கு நடப்பு ஆண்டில் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் அளவிற்குச் சிறு சேமிப்புப் பத்திரங்கள் வடிவில் பரிசுகள் அளிக்கப்படும். இதற்கிணங்க, 12-வது கோரிக்கையின்கீழ் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. நமது மாநிலத்தில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகளைச் சித்தரிக்கின்ற செய்திக் கதிர் ஒன்றைத் திங்கள்தோறும் தயாரிப்பதற்கான திட்டமொன்றையும் அரசு தொடங்கியுள்ளது. 9-வது மானியத்தின்கீழ் இதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இத் துணை மதிப்பீடுகளில் அடங்கியுள்ள பிற திட்டங்கள் பற்றி சிறப்பான எந்த விளக்கமும் தேவையில்லையென்று கூறி, 1968-69-ம் ஆண்டிற்குரிய இந்த முதல் துணை மதிப்பீடுகளை இம் மன்றம் ஏற்கும்படி வேண்டுகின்றேன்.

5. அரசினர் தீர்மானங்கள்.

(அ) அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நமது சட்டப் பேரவை நடைமுறை விதிகளின் 21(3) பிரிவின்படி இன்றைய நிகழ்ச்சி நிரலில் ஐந்தாவது நிகழ்ச்சியாகவுள்ள தமிழ்

1968 ஆகஸ்ட் 17] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

நாடு மின்சார வாரியத்தின் 1968-69-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீதான விவாதத்தை நான்காவது நிகழ்ச்சியாக ஏற்றுக்கொண்டு, நான்காவதாகவுள்ள அரசினர் தீர்மானத்தை ஐந்தாவது நிகழ்ச்சியாக மாற்றிக்கொள்ளுமாறு கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

6. 1968-69-ம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைமீது விவாதம் (தொடர்ச்சி).

* திரு. ந. வீராசாமி : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1968-69-ம் ஆண்டுக்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைமீது நான் ஒரு சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். நாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு இருபது ஆண்டு காலமாக நாட்டு மக்கள் ஒரே ஆட்சியின்கீழ் பட்ட இன்னல்களுக்குப் பிறகு ஒரு புது ஆட்சி வந்ததைப்போல் தமிழ்நாடு மின்சார வாரியம், ஒரு பத்து ஆண்டு காலமாக ஒரே தலைமையின்கீழ் இயங்கி வந்த அந்த இலாகா இப்போது பல மாற்றங்களுக்கிடையில் ஒரு புதிய நிலையைப் பெற்றிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. அத்தகைய நிலையில் இந்த அரசு வந்ததற்குப் பிறகு செய்திருக்கிற நல்ல பல காரியங்களை இந்த இடத்தில் நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு மின்சார இலாக்காவில் பணியாற்றிக்கொண்டிருந்த தொழிலாளர்கள் பல ஆண்டுகளாக அவர்களுடைய கோரிக்கைகளை இந்த மன்றங்களிலும், அந்த இலாக்காக்களிலும், அங்கேயிருக்கும் அதிகாரிகளிடத்திலும் எடுத்துக் கூறியும்கூட அதிலே வெற்றி பெறுமல் இருந்தார்கள். ஆனால் இந்த அரசாங்கம் தகுந்த உத்தரவுகளை அங்கேயிருக்கும் அதிகாரிகளிடத்தில் இட்டதன் பயனுக அங்கே இப்பொழுதிருக்கும் தலைவரும், மற்ற அதிகாரி களும் தொழிலாளர்களுடன் நல்ல உறவுமுறை வைத்துக்கொண்டு பணியாற்றியதன் காரணமாக இன்று அங்கு சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், தமிழ்நாடு மின்சார இலாக்காவில் பணியாற்றிக்கொண்டிருந்த கணக்காயர்கள் தங்களுடைய கோரிக்கைகளை, முக்கியமாக வேலைப்பளு குறைய வேண்டுமென்ற கோரிக்கையை பத்தாண்டுக் காலமாகக் கூறி போராடி வந்தார்கள். ஆனுல், இதுவரையில் நிறைவேற்றப் படாத அந்தக் கோரிக்கை இப்பொழுது நிறைவேற்றப்பட்டிருக் கிறது என்பது மட்டுமல்ல. அப்படி நிறைவேற்றியிருப்பதன் காரணமாக ஏறக்குறைய 4 டெபுடி சீஃப் அக்கௌண்டண்ட் பதவிகளும், 70 அக்கவுண்டண்ட் பதவிகளும், 320 உதவியாளர்கள் என்று சொல்லப்படும் அந்தப் பதவிகளும், 394 எழுத்தர்களும் இப்படி இன்னும் பல, ஸ்டோர் கீப்பர்கள், பில் கலெக்டர்கள்